தமிழில் கொடுக்கலாம் என்று சொன்னால் அவர்களே எழுதிக் கொடுத்து விட முடியும். ஆகவே, அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழில் எழுதிக் கொடுத்தால் அதிகாரிகள், அது ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்று சொல்வது தவறு, அப்படிச் சொல்லமாட்டார்கள். அப்படிச் சொல்வதாக இருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதன் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

மாணவர் விடுதியில் தொலை பேசி

*108. கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள எம். சி. ராஜா ஹரிஜன மாணவர்கள் தங்கும் விடுதியில் தொலை பேசி வைக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது அமல் நடத்தப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) இந்த மாணவர் விடுதி மாம்பலம் பகுதியில் அமைந்துள்ளது. மாம்பலம் எக்ஸ்சேஞ் பகுதியில் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் முழுச் சக்தியுடன் செயல்பட்டு வருகிறது என்றும், இந்த எக்ஸ்சேஞ்சை விரிவுபடுத்தப்படும்வரை புது லைன்களை அமைக்க முடியாது என்றும் டெலிபோன் துறை தெரிவித்துள்ளது. எக்ஸ்சேஞ்ச் விரிவுபடுத்தப்பட்டவுடன், இது குறித்துடெலிபோன் துறையுடன் கடிதப் போக்குவரத்து நடைபெறும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தனிப்பட்ட விடுகளுக்குக் கூட டெலிபோன் லைன் கேட்டால் உடனே கொடுத்து விடுகிறார்கள். பல கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தங்கியிருக்கும் ஹாஸ்டலில் அவர்கள் அவசரமாக செய்தி கொடுக்கக்கூடிய நிலைமைகள் நிறைய ஏற்படும். அந்த நிலையை வைத்தாவது உடனடியாக டெலிபோன் வசதி செய்து கொடுக்க முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாமதத்திற்கு விளக்கம் கூறியிருக்கிறேன்.

தங்கப் பத்திரம்

*109. கேள்வி.—திரு. து. ப. அழக முத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்தில் தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்ய தங்கம் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு தங்கம் கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) நிர்வாக அதிகாரியின் அறிக்கைப்படி 499 கிராம் தங்கம். தங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன் : மதுரை மாவட்ட அபிவிருத்தி மன்றம் கூடி இந்தப் பாதுகாப்பு நிதிக்குத் தங்கம் வசூலிக்கும்போது அதிகாரிகள்தான் வசூலிக்க வேண்டும், அவர்கள் அதற்கான ரசீது கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. அதற்கு மாறாக வசூலிக்கப்பட்ட தங்கம் யார் மூலம் வசூலிக்கப்பட்டது? அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கு மாறாக ஒன்றும் நடைபெறவில்லை. அதிகாரிகள் வசூல் செய்கிறார்கள்; ரசீது கொடுக்கிறார்கள். கொடுக்கிறவர்கள் யாரிடத்தில் நம்பிக்கை இருக்கிறதோ அவர்களிடம் கொடுக்கிறார்கள். அவர்கள் அதிகாரிகளிடத்தில் சேர்த்து விடுகிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : கோயில் தங்கத்தைத் தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்வதற்கு முன்னால் என்டோமென்ட் கமிஷனருடைய அனுமதியைப் பெற்றார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்டோமென்ட் கமிஷனர் அனுமதி பெற்றுத்தான் தங்கம், தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்யப்படுகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மதுரை கோயிலிலிருந்து தங்கம் வசூலிப்பது மாவட்ட கலெக்டரா அல்லது சம்பந்தப்பட்ட வேறு அதிகாரிகளா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கலெக்டர் சில பேரை இதற்கென்று அனுமதித்திருக்கிறார். அவர்கள்தான் இதைப் பெறுகிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : கோயில்களில் இருக்கக்கூடிய தங்கத்தைக் காங்கிரஸ் தலைவர் அவர்களிடத்தில் பிரியப்பட்டு அங்கிருக்கக்கூடியவர்களும் பொதுமக்களும் கொடுக்கும்போது அதைச் சிலர் ஆட்சேபிப்பதற்குப் பொறாமைதான் காரணமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் என்னைக் காரணம் கேட்டுப் பயன் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் கீழ் கோயில்கள் இருக்கின்றன. அதனுடைய பொருள்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்போது அதிகாரிகள் மூலந்தான் ஒப்படைக்கவேண்டுமென்றிருக்கிறது. காங்கிரசு தலைவர் காமராஜர் அவர்கள் தகுதி உடையவரா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. அரசாங்கத்தில் ஈடுபடாத ஒருவர் பொருளை வாங்கிக் கொடுக்கும் முறை இருக்கிறதா? இதிலே முறைதான் கேட்கப்படுகிறதே தவிர, காமராஜருக்குத் தகுதி இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியல்ல. ஆகவே, அது முறைதானா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தங்கத்தை வாங்கி ரசீது கொடுக்கிறவர்கள், வேண்டிய இடத்தில் சேர்ப்பிக்கிறவர்கள் அதிகாரிகள்தான். ஆனால் கோயில் நிர்வாகிகள் அவர்களுக்கு

[5th February 1966

யாரிடத்தில் நம்பிக்கை இருக்கிறதோ அவர்களை அழைத்துக் கொடுத்தால் அவர்கள் மூலம் அதிகாரிகளிடத்தில் கொடுக்கப்படுகிறது. பின்னால் கவர்னர் உரை விவாதத்திற்கு விடை அளிக்கும் போது இதைப்பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாகச் சொல்லுகிறேன்.

பத்திரிகைகள் மீது நடவடிக்கை

*110. கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. மு. கருணாநிதி : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காஷ்மீர் பிரச்சினை பற்றியும், பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவு பற்றியும் கருத்துக்கள் வெளியிட்ட பத்திரிகைகள் எவை மீதாவது பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ?

(இ) அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) Sri T. Sadasivam, Editor, Printer and Publisher of the Tamil Weekly 'Kalki' and Printer and Publisher of the English Weekly 'Swarajya', and Sri Pothan Joseph, Editor of 'Swarajya' were prosecuted for the publication of a prejudicial cartoon and articles in certain issues of 'Kalki' and 'Swarajya'. The prosecutions in these two cases were withdrawn on a reconsideration of the position at the instance of Sri C. Rajagopalachariar.

திரு. செ. மாதவன் : இந்தப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டது. ஆனால் மற்றப் பத்திரிகைகள் மீது வழக்குகள் தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்காமல் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் அந்தப் பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருப்பதுதான். நாங்கள் அந்தப் பத்திரிகைச் சொந்தக்காரர்களையும், ஆசிரியர்களையும் கேட்டிருக்கிறோம்; அவர்கள் எந்த நிலையில் இதை வாபஸ் பெற முடியும் என்று கேட்டிருக்கிறோம். மேற்கொண்டு அவர்கள் முன் வந்தால் அரசாங்கம் அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. எஸ். முருகையன் : இந்த இரு பத்திரிகைகள் மீது வழக்கு போடப்பட்ட பிறகு அது பற்றிப் பரிசீலனை செய்யப் பட்டதா ? பரிசீலனை செய்து முடிவதற்குள் அது கைவிடப்பட்டதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழக்கு தகுந்த காரணத்தோடுதான் போடப்பட்டது. அதற்குப் பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு வழக்கை மேற்கொண்டு தொடர வேண்டிய அவசியம் இல்லையென்று அரசாங்கம் கருதியதால் வாபஸ் பெறப்பட்டது.